1972 டிசம்பர் 14]

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகளுக்கு பெண் டாக்டர்கள்

* 171. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள E.S.I. மருத்துவமனைகளில் M.B., B.S. படித்த பெண் டாக்டர்கள் இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) உண்மை இல்லை. இம்மாநிலத்தில் மூன்று இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் உள்ளன. மூன்றிலும் பெண் டாக்டர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதன் விபரம் பின்வருமாறு :—

மருத்துவ மனையின் பெயர்	வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும் பெண் டாக்டர்களின் எண்ணிக்கை.
மருத்துவமனை, சென்னை	24
மருத்துவமனை, கோயம்புத்தூர்	16
மருத்துவமனை, மதுரை	2

எல்லாப் பெண் டாக்டர்களும் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள்.

Mukhyasevikas absorbed in Women's Welfare Department

* 172 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the number of "Mukhyasevikas" who were under the services of the State Social Welfare Advisory Board till 31st March 1961 and absorbed in the Women's Welfare Department as per G.O. Ms. No. 2078, dated 22nd July 1961 of the Rural Development and Local Administration Department; and

(b) whether they have been given weightage and increment from the date of their absorption?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 20.

(இ) இல்லை.

[1972 டிசம்பர் 14

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon. Minister whether the Government are aware that there are still aggrieved 'Mukhyasevikas' whose services have not been regularised from the date of appointment in the Social Welfare Board as per the protection given in the concerned Government Order?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த முக்கிய சேவிகாக்கள் 1961-ம் ஆண்டு வரையில் தனிப்பட்ட முறையில் மத்திய அரசாங்கத்தின் சமூக நல பணித் திட்டத்தின் கீழ் பணி புரிந்தவர்கள். ப்ராஜக்ட் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி மூலம் அவர்கள் வேலை செய்தார்கள். ஊதியமும் தரப்பட்டிருக்கிறது. ப்ராஜக்ட் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி மூலம் பணியாற்றியவர்களுக்கு அரசாங்கச் சார்பில் கொடுக்கப்படுகிற ஊதிய உயர்வு தரமுடியவில்லை என்று இயக்குநர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள், அதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. வீ. மலைக்கண்ணன் : இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற முக்கிய சேவிகாக்களின் பணிகள், ஊராட்சி ஒன்றியங்களில் அவர்கள் தேவை இல்லை என்று கருதப்படுகிறது. ஆதலால் வேறு தகுதியான துறைகளுக்கு அவர்களை மாற்றி பதவி தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படி எந்த ஊராட்சி ஒன்றியமும் முக்கிய சேவிகாக்களின் பணி தேவையில்லை என்று யாரும் கூறவில்லை. அவர்களின் பணி அதிகமாகியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பல்வேறு பணிகளை, மகளிர்க்குள்ள நல்ல பல்வேறு பணிகளை முக்கிய சேவிகாக்கள்தான் முன் நின்று கிராமங்களில் செய்து வருகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது ஒருசில முக்கிய சேவிகாக்கள் அவர்களுக்குரிய சம்பளம் கிடைக்கவில்லை என்று ஒரு புகார் சொல்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படுமானால், அது சம்பந்தமாக எவ்வளவு பணம் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படும்? அதிகப் பணம் இழப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் அவர்கள் எப்போது போர்ட் சர்வீஸில் ஏறினார்களோ, அந்தத் தேதி முதல் ரெகுலரைசேஷன் செய்து கொடுப்பதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் ஏற்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த வாரியத்தின் அடிப்படையில் பணியாற்றுகிற எல்லோருக்குமே ப்ராஜக்ட் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி மூலம் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அரசுப்

பணியாளர்களாகக் கருதப்படவில்லை. அரசுப் **பணியாளர்களாகக் கருதப்** பட்டால்தான் ஊதிய உயர்வு போன்ற அதற்குரிய வகைகள் செய்யப்படும். அதனால் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது.

THIRU N. DENNIS : Sir, may I know whether any representation was received by the Government from the aggrieved ' Mukhyasevikas ' duly recommended by the Collectors for the regularisation of their services as per the protection given in the Government Order from the date of their appointment in the Social Welfare Board ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்கள் கோரிக்கை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கிடைக்கும் பாறைப்படிவங்கள்.

*173. வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகத்தில் கிடைக்கும் பாறைகள் சலவைக் கற்கள் தயாரிக்கப் பயன்படுவதாக சொல்லப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள வீர சோழபுரம், நத்தம், பனையங்கல், தியாகதுருகத்திற்கு அருகிலுள்ள கொங்கராய பாளையம் ஆகிய கிராமங்களில் டாலிரைட் என்னும் கருவண்ணமுறைப் பாறைகள் சிற்சிறு படிவங்களாகக் கிடைக்கின்றன.

சைக்கிள் தொழிற்சாலைகள்

*174. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிய சைக்கிள் தொழிற்சாலைகளைத் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூரில் ஒரு சைக்கிள் தொழிற்சாலை கூட்டுறவுமுறையில் துவக்கப்பட்டது. அந்தத் தொழிற் சாலை இன்று இயங்குகிறதா ? ஆமெனில் அது லாபத்தில் நடைபெறுகிறதா,